IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 110/2019

| | |
|---|---|
| Deposition of Witness | : PW 2 |
| Name | : பக்தன் (வயது – 63) |
| Father's Name /W/o | : த/பெ குப்பம் மந்தடி |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : அரக்கோணம் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 12.08.2025.

## குறுக்கு விசாரணை 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில்

1. இந்த வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றாலும் அதன் சர்வே எண் என்னவென்றால் ஆனைப்பாக்கம் கிராமம் சர்வே எண்.3/1,3/3, 3/4 இல் உள்ளது. மேற்படி 3 சர்வே எண்ணுக்கான பட்டா அரசாங்கம் உமாமகேஸ்வரி, கெஜவல்லி, கண்ணியம்மாள் பெயரில் வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். வாதி பன்னீர் செல்வம், கெஜவல்லி, கண்ணியம்மாளிடம் கிரையம் பெற்று இருக்கிறார் என்றால் சரிதான். உமாமகேஸ்வரியிடமிருந்து வாதி கிரையம் பெறவில்லை என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தில் நாங்கள் இருப்பதற்கு முன்பு அனாதீனமாக இருந்தது என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்ட நல வாரியத்தில் மனு அளித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சங்கதி தெரிந்தும் என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்தும் நான் தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 1 முதல் 3 பிரதிவாதிகள் மனு அளித்ததன் பேரில் 6 முதல் 8 பிரதிவாதிகள் விசாரணை நடத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதி 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் வாதி அவர்களிடம் மனு அளித்தார்கள் மற்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியாமல் வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.